1982 செப்டம்பர் 8] [திரு. ரகுமான்கான்

நாங்கள் தயாராக இருப்பது அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டம் திருத்த சம்பந்தமாக தயார் நிலையில் இருக்கிறோம். எங்களுடைய கணக்குப் படி இன்றைக்கு 1.30மணிக்கு எல்லாம் அது முடிந்து விடுகிறது. எனவே சேல்ஸ் டாக்ஸ் பிரச்சனை வருகிற போது இப்போது அந்தப் பிரச்சினையை நீங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக மசோதாவைஅமைச்சர் அவர்கள் வரவில்லை என்பதற்காக உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது அதிலே நான் குறுக்கிடவில்லை அமைச்சர் அவர்களுடைய சவுகரியத்தை முன்னிட்டு இப்போது நம்முடைய அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களுடைய மசோதா வருகிறது. ஆனால் அதற்கு எங்களுக்கு அவகாசம் இல்லை. நாங்கள் தயார் நிலையில் அதற்கு இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. அதற்குப் பிறகு உங்களுடைய இஷ்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் வரவில்லைஅதனால் தான் எடுத்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு திரு.ச.இராமசந்திரன்: துணைத்தலைவர் அவர்களே பேரவையின் விதி 30. உள்விதி (3) இன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்.

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4' அரசினர் சட்டமுன் வடிவுகள்-ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (111) 1982ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வு செய்வதை பின்னர் எடுத்து கொள்ள வேண்டும். மற்ற சட்டமுன்வடிவுகளைத் தொடர்ந்து வரிசைப் படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ). பொது விற்பனை வரி (நான்காம் திருத்த)

சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த)சட்ட முன் வடிவு பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்து கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.